சொல்வது தவறு. அவதூறு சொன்னதாகத் தங்கமணி அவர்கள் சொன்னார்கள். எந்த அவதூறும் சொல்லவில்லை. யார் யார் எவ்வளவு பாக்கி என்று சொன்னேன். தவறாக இருந்தால் சொல்லுங்கள். திருமதி என். கே. பெரியம்மாள்—திரு. என். கே. பழனிசாமி எம்.எல்.ஏ.வின் மனைவி 38,302 ரூபாய் பாக்கி என்று சொன்னேன். அவதூறாக இருந்திருந்தால் அவர்களே மறுத்திருக்கலாம். தவறாகச் சொன்னால் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பத்து ரூபாய் குறைவு என்று சொன்னால் கூடத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். சுதந்திராக் கட்சித் தலைவர் வெங்கடசாமி அவர்கள் சொன்னது மாதிரி சந்தித்துப் பேச எப்போதும் தயார். யாரையும் சந்திக்க முடியாது என்று அடம் பிடிக்கும் ஆட்சியல்ல இந்த ஆட்சி; பேச்சு வார்த்தைக்கு என்றைக்கும் தயாராக இருக்கும் ஆட்சிதான் இந்த ஆட்சி.

THIRU B. VENKATASWAMY: I hope the leaders will accept it. Only when we discuss things, we will come to know the facts. Only by discussion, we can solve the issues. I request the Hon. Chief Minister to hold discussion with the leaders.

மு.ப. 10-00 **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நமது சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தை மதித்து வெளிநடப்பு செய்யாமல் நல்ல முறையில் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதற்காக அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். (ஆரவாரம்.) ஏற்றுக்கொள்வது மாத்திரமல்ல, அந்த விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். அவர்கள் தலைமையில், வெங்கடசாமி அவர்கள் வந்திருந்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் தயாராயிருக்கிறேன். (ஆரவாரம்.)

(4) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிவிப்பு. நேற்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. 8-8-1973, 9-8-1973, 10-8-1973 ஆகிய மூன்று நாட்களிலும் கேள்வி நேரம் இருக்காது.

[ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்கள் திரும்ப வந்தனர். (ஆரவாரம்.)]

1973 ஆகஸ்ட் 7] [பேரவைத் தலைவர்]

10—8—1973 அன்று பேரவை மாலையிலும், 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.

மற்ற அலுவல்கள் ஏற்கெனவே அறிவித்தபடி நடைபெறும்.

(5) அறிக்கை அளித்தல்.

ஆசிரியர்களுக்கு வழங்க இருக்கும் சலுகைகள் குறித்து கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு தகுதி பெற்றும், செகண்டரி கிரேடு பதவிகள் இல்லாத காரணத்தினால், ஹையர் கிரேடு பதவிகளிலேயே பணியாற்றி வருகின்ற நிலையைத் திருத்த, ஒவ்வோர் ஆண்டும் செகண்டரி கிரேடு பதவிகளைப் புதிதாக ஏற்படுத்தித் தரும் கொள்கையை அரசு பின்பற்றி வருகிறது. இதற்கிணங்க, 1967 ஆம் ஆண்டுக்குப் பின் 1972-73 ஆம் ஆண்டு வரை, 24,500 ஹையர் கிரேடு பதவிகள் செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. 1973-74 ஆம் ஆண்டுக்கு, 1—10—1973 முதற்கொண்டு மேலும் 5,000 புதிய செகண்டரி கிரேடு பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. ஆக மொத்தம் 29,500 செகண்டரி கிரேடு பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பின்பும் ஏறத்தாழ 4,000 ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு தகுதி பெற்றிருந்தும், செகண்டரி கிரேடு பதவி இல்லாத காரணத்தால் ஹையர் கிரேடு பதவியிலேயே தொடர்ந்து பணியாற்றும் நிலை இருக்குமென்று மதிக்கப்பட்டுள்ளது. இந்த 4,000 ஆசிரியர்களுக்கும் 2—10—1973 முதல் செகண்டரி கிரேடு பதவிகளை அனுமதித்து, அவர்களுக்குப் பதவி உயர்வளிக்க அரசு முடிவு செய்துள்ளது. பெரும் செலவைப் பொருட்படுத்தாமல் இந்நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கும்பொருட்டு, இந்த ஆண்டு 2—10—1973 முதல் வழங்கப்பட்டுள்ள 5,000 புதிய செகண்டரி கிரேடு பதவிகளுக்கு மேலாக மேலும் 4,000 பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அரசு முன்வந்துள்ளது.

தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றுவோரை பொறுத்தவரை, தலைமையாசிரியர் உட்பட 4 ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில், தலைமையாசிரியர் படியாக மாதம்